சிறப்பிதழ்
**Special Issue**

*Chief Editor*
*Dr. M. Sadik Batcha*

*Advisory Editor*
*Dr. N. Chandra Segaran*

*Editorial Board*
*Dr. MAM. Rameez*
*Dr. Jeyaraman*
*Dr. A. Ekambaram*
*Dr. G. Stephen*
*Dr. S. Chitra*
*Dr. S. Senthamizh Pavai*
*Dr. A. Shunmughom Pillai*
*Dr. P. Jeyakrishnan*
*Dr. Seetha Lakshmi*
*Dr. S. Easwaran*
*Dr. Kumara Selva*
*Dr. Ganesan Ambedkar*
*Dr. Krishanan*
*Dr. Kumar*
*Dr. S. Kalpana*
*Dr. T. Vishnukumaran*
*Dr M. N. Rajesh*
*Dr. Govindaraj*
*Dr. Uma Devi*
*Dr. Senthil Prakash*
*Dr. Pon. Kathiresan*
*Dr. S. Vignesh Ananth*
*Dr. M. Arunachalam*
*Dr. S. Bharathi Prakash*

**13-14 புரட்டாசி 2052**
**29th & 30th September 2021**

**ISSN : 2321 - 984X**

# நவீனத் தமிழாய்வு

*(பன்னாட்டுப் பன்முகத் தமிழ் ஆய்விதழ்)*

*Journal of*

# Modern Thamizh Research

*(A Quarterly International Multilateral Thamizh Journal)*

Arts and Humanities (all), Language
Literature and Literary Theory, Tamil
UGC Care Listed (Group-I) Journal

சிறப்பிதழ் : **பன்னாட்டுக் கருத்தரங்கம் - 2021**
**முதுகலைத் தமிழ்த்துறை**
**ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி**
பெரியகுளம், தேனி மாவட்டம், தமிழ்நாடு, இந்தியா

## இலக்கியங்களில் மனித மாண்புகள்

சிறப்பிதழ் ஆசிரியர்கள்

**Special Issues Editor**
**முனைவர் செ. ரெஜினா**

**Special Co - Editor's**
**முனைவர் ஞா. பிரான்சிஸ் கேதரின்**
துறைத் தலைவர்
**முனைவர் ஜெ. அருள் இருதய ஜெயந்தி**
**முனைவர் தே. ராஜசீலி**
**முனைவர் அ. ஜான்சி மேரி**

*Published by*

**RAJA PUBLICATIONS**
**10, (Upstair), Ibrahim Nagar, Khajamalai,**
**Tiruchirappalli - 620 023, Thamizh Nadu, India.**
**Mobile : +91-9600535241**
**website : rajapublications.com**

**30** பகுதி-2
**Part -2**

# வள்ளுவம் காட்டும் வாழ்வியல் நெறி

முனைவர் அ. டெல்பின்
உதவிப் பேராசிரியர், திருச்சிலுவை கல்லூரி,
நாகர்கோவில், தமிழ்நாடு, இந்தியா.

**ஆய்வுச் சுருக்கம்**

வள்ளுவர் காட்டும் வாழ்வியல் நெறிகளை ஆராய்ந்து பகுத்துக் கூறுவதாகும். இக் கட்டுரையில் வள்ளுவர் கூறிய வாழ்வியல் நெறிகளாக, பொருண்மைச் சிறப்பு, வாழ்வியல் பதிவு, முதன்மைப் பயன், பன்முகப்பார்வை, தனி மனிதநிலை, மரபுகளைத் தகர்த்தல், அறநெறிப்பட்ட வாழ்க்கை, வாய்மை, மும்மை அறம், ஈதலறம், காதலறம், ஆண் – பெண் சமனியம், சிறைகாக்கும் காப்பு எவன்செய்யும் மகளிர், சமுதாயக் கொடுமைகள், பகுத்தறிவு நோக்கு, மானுடத்தின் மலர்ச்சி எனப் பல நெறிகள் பகுத்துக் கூறப்பட்டிருக்கிறது. வள்ளுவர் கூறிய வாழ்வியல் நெறிகள் தமிழ்க் குடிமகன் ஒருவனுக்கு மட்டுமன்றி, உலகில் மனிதனாகத் தோன்றிய அனைவருக்கும் உரிய வாழ்வியல் நெறிகளாக அமைந்திருப்பதே திருக்குறளின் சிறப்பாகும். அதனைக் கண்டறிந்து தொகுத்துரைப்பது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**முன்னுரை**

திருக்குறள் நீதி நூல் மட்டுமன்று அது ஒரு வாழ்வியல் நூல். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முற்பட்ட மனிதனுக்காக மட்டுமல்ல, இருபத்தோராம் நூற்றாண்டின் புதிய தலைமுறையினர்க்கும் வழிகாட்டும் புரட்சி நூல். வள்ளுவத்தின் பொருண்மை காலந்தோறும் புதிய புதிய கருத்தாக்கங்களைத் தந்து, இனம், மொழி, நாடு என்னும் எல்லைகளைக் கடந்து மனித வாழ்க்கையை வளப்படுத்துகிறது.

**பொருண்மைச் சிறப்பு**

சங்க காலத்தைத் தொடர்ந்து தமிழுக்கும், தமிழர்க்கும் கிடைத்த அரிய களஞ்சியமான வள்ளுவத்தில் உலகளாவிய சிந்தனைகளும் மனிதனை உயர்த்தும் உயரிய நோக்கும் காணப்படுகிறது. வள்ளுவம் 'தமிழனுக்குரியது' என்னும் நிலையைக் கடந்து உலகத்தவர் அனைவர்க்கும் உரியதாக உள்ளமையை உணர்ந்த பாரதி 'வள்ளுவன் தன்னை உலகினுக்கே தந்து வான்புகழ் கொண்ட தமிழ்நாடு', எனப் புகழ்ந்துரைத்தார். வள்ளுவப் பொருட் சிறப்பை அறிந்த மதுரைத் தமிழ் நாகனார் 'எல்லாப் பொருளும் இதன் பால் உள' என்று தெளிந்துரைத்துள்ளார். இவை வள்ளுவத்தின் காலமும் எல்லையும் கடந்து நுண்பொருட் சிறப்பை உணர்த்துவன.

**வாழ்வியல் பதிவு**

வள்ளுவம் தான் தோன்றிய காலத்தோடு நின்று விடாமல் இந்த நூற்றாண்டு மனிதனுக்கும் வாழச்சொல்லிக் கொடுக்கிறது. வாழ்க்கையைச் சொல்லிக் கொடுக்கிறது. வள்ளுவம் இலக்கியம் என்னும் நிலையில் நின்று விடாமல் மனித வாழ்வியல் கூறுகளை காட்டும் பதிவுகளாக உள்ளது. இதனை சராசரி மனிதன் அன்றாட வாழ்க்கையில் ஒழுகவேண்டிய நெறிமுறைகளின் தொகுப்பாகத் திருக்குறள் படைக்கப்பட்டுள்ளது என்னும் அறிஞர் கருத்தினால் அறியலாம். வள்ளுவத்தில் உள்ள ஒவ்வொரு குறளும் மனித வாழ்க்கையின் நெறிகளை, வழிமுறைகளைத் தருவன.

மானிடப் பண்பு இயல்புகளுக்கு ஓர் உறைவிடமாய் – வாழ்க்கை, வழி நெறிமுறைகளுக்கான வழிகாட்டியாய் அமைந்துள்ளது திருக்குறள் என்னும் முத்தமிழ் அறிஞரின் கருத்தும் வள்ளுவம் ஒரு வாழ்வியல் நூல் என்பதை உறுதிப்படுத்துகிறது.

நவீனத் தமிழாய்வு (பன்னாட்டுப் பன்முகத் தமிழ் காலாண்டு ஆய்விதழ்) (கலை மற்றும் மனிதவியல், மொழி) ISSN:2321-984X - சிறப்பிதழ்
Modern Thamizh Research (A Quarterly International Multilateral Thamizh Journal) (Arts and Humanities, Language) ISSN:2321-984X SPECIAL ISSUE
இலக்கியங்களில் மனித மாண்புகள்-இணையவழி பன்னாட்டுக் கருத்தரங்கம் - 29.09.2021&30.09.2021
முதுகலைத் தமிழ்த்துறை, ஜெயராஜ் அன்னபாக்கியம் மகளிர் தன்னாட்சிக் கல்லூரி, பெரியகுளம், தேனி, தமிழ்நாடு, இந்தியா.